**செய்தி வெளியீடு எண் : 534** **நாள் : 07.03.2025**

செய்தி வெளியீடு

**திருவாரூர் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடங்கள் கட்டுதல், வாய்க்கால் பாலம் கட்டுதல், பாலங்கள் கட்டுதல், சமுதாய நலக்கூடம் அமைத்தல், அரசு மருத்துவமனை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (7.3.2025) திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொது சுகாதாரத்துறை, நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பள்ளிக் கல்வித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, போக்குவரத்துத் துறை உள்ளிட்ட அரசு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள், அவற்றினால் பொதுமக்கள், விவசாயிகள் அடைந்த பயன்கள் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

**இக்கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களுக்கு மாண்புமிகு துணை முதரலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டி,**

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் திருவாரூர் மாவட்டத்திற்கு வந்தடைந்தேன். நேற்று, மகளிர் சுய உதவிக் குழுவினரை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினோம். அதே போல மாற்றுத்திறனாளிக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, தாட்கோ திட்டத்துறையின் மூலம் கறவை மாடுகள் வழங்கும் நிகழ்ச்சி, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு ஆணை வழங்கும் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் நேற்று நான் கலந்து கொண்டு இருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்துவது குறித்து நேரில் ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டோம். மேலும், மகளிர் சுய உதவிக் குழுவினரின்

கோரிக்கையின்படி பழவனக்குடி ஊராட்சியில், முதலமைச்சரின் ஆணைக்கிணங்க உடனடியாக பட்டா வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இன்று மாண்புமிகு அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்றைக்கு இந்த மாவட்டத்திற்கான ஆய்வுக் கூட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி புதிய சாலைகள் அமைத்தல், அங்கன்வாடி மைய கட்டடங்கள் கட்டுதல், வாய்க்கால் பாலம் கட்டுதல், பாலங்கள் கட்டுதல், சமுதாய நலக்கூடம் அமைத்தல், அரசு மருத்துவமனை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ரூ 80.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இவற்றில் மாவட்டம் முழுவதும் பல்வேறு சாலைகளை சீரமைப்பதற்கு மட்டும் ரூபாய் 50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை தவிர திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, திருத்துறைப்பூண்டி நகரில் நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக சுமார் 3.5 ஏக்கர் பரப்பளவில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

மேலும் மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்பு கிடங்கு குடோன் அமைக்க, பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து முதற்கட்டமாக ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில், 12,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மொத்தம் மூன்று சேமிப்புக் கிடங்குகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளன.

திருத்துறைப்பூண்டியில் வீரன் நகர் பகுதியில் வசிக்கின்ற நரிக்குறவர்கள் அவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார்கள். உடனடியாக பட்டா தயார் செய்யப்பட்டுள்ளது. நேற்று இரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்திருந்தோம். முதலமைச்சர் அவர்கள் ஒரு கட்டளை இட்டார்கள். சம்பந்தப்பட்ட 77 நரிக்குறவர் மக்களுக்கு, குடும்பத்தினருக்கு பட்டா வழங்கினால் மட்டும் பத்தாது, அவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா 5 லட்சம் ரூபாய் செலவில் வீடு கட்டித் தருமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி இந்த ஆய்வு கூட்டத்தை முடித்துவிட்டு திருத்துறைப்பூண்டி சென்று சம்பந்தப்பட்ட நரிக்குறவர்களுக்கு கொற்கை பகுதியில் வீடுகளை கட்டிக்கொள்வதற்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைத் தவிர மாவட்டத்தின் மற்ற கோரிக்கைகள் குறித்து முறையாக ஆய்வு செய்து, அதற்கான உத்தரவுகளும் படிப்படியாக மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசனையோடு வழங்கப்படும். தவிர மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளின் முன்னேற்றம் குறித்து சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் அலுவலர் மூலம் ஒருங்கிணைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி** – டெல்டா மாவட்டத்தில் இரண்டு நாட்களாக ஆய்வு செய்துள்ளீர்கள். ஆய்வுகளில் அரசு திட்ட பணிகள் குறித்து மனதிருப்தி அடைந்துள்ளீர்களா? அது பற்றி……

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதில்** : 2023–ஆம் ஆண்டில் ஒருமுறை வந்தேன். 2024–இல் ஒருமுறை வந்தேன். தற்போது 2025–இல் மூன்றாவது ஆய்வு. நல்ல முறையில் பணிகள் செய்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சில கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். ஒவ்வொரு தொகுதிக்கும், சில விஷயங்களை கேட்டு உள்ளார்கள். குடிதண்ணீர், தெருவிளக்குகள் அமைத்தல், சாலை வசதிகள், மினி பஸ் வசதி போன்றவற்றை கேட்டுள்ளார்கள். அவையெல்லாம் ஒவ்வொன்றாக விரைவில் செயல்படுத்தப்படும்.

**கேள்வி –** அரசு ஊழியர்களின் போராட்டத்திற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. அதற்காக பல தரப்புகளிடமிருந்து விமர்சனங்கள் வந்துக்கொண்டிருக்கிறது. அது பற்றி…………..

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதில் –** அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது. ஒரு வாரத்திற்கு முன்பு கூட நான்கு அமைச்சர்கள் குழு அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வரவழைத்து பேசியிருக்கிறார்கள். விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும்.

**கேள்வி –** டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் ED ரெய்டு நடைபெற்றுவருகிறது. மதுபான ஆலையிலும் ED ரெய்டு நடைபெற்றுவருகிறது. அது பற்றி……….

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதில் –** ஒன்றிய அரசு, நம்முடைய மும்மொழி கொள்கை எதிர்ப்பு, நிதிப்பகிர்வு, டீலிமிட்டேசன் (தொகுதி மறு சீரமைப்பு) ஆகியவற்றிற்கு தமிழ்நாடு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துவருவதால், ஒன்றிய அரசு தங்களுடைய ஏஜென்டை வைத்து திசைத் திருப்பும் வழியாக நாம் பார்க்கலாம். ரெய்டு முடியட்டும். அதற்குப்பிறகு அவர்களே சொல்வார்கள். அதன் பிறகு இதைப் பற்றி பேசலாம்.

**கேள்வி –** மும்மொழி கொள்கைக்காக மாணவர்களிடம் கையெழுத்து வாங்குகிறார்கள். இன்றைக்கு சென்னையில் நடந்து இருக்கிறது. அது பற்றி………

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதில் –** குழந்தைகளிடம் கையெழுத்தே வாங்க கூடாது. நாங்களும் நீட் தேர்விற்காக சுமார் 1 கோடி கையெழுத்து வாங்கினோம். அப்போது, பள்ளி மாணவர்களையெல்லாம் தவிர்த்துவிட்டு தான் நாங்கள் கையெழுத்து வாங்கினோம். ஏற்கனேவே மிஸ்டுகால் கொடுத்து 1 கோடி பேரை சேர்த்தார்கள். அதன் தொடர்ச்சியாக இதைப் பார்க்கிறோம்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்**கள்** திரு.பூண்டி.கே.கலைவாணன், திரு. க.மாரிமுத்து, தாட்கோ தலைவர் திரு.உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனசந்திரன், இ.ஆ.ப., காவல் கண்காணிப்பாளர் திரு.யு.கரன்,இ,கா.ப., உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu